**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 04** **நாள்: 03.01.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களில் கடந்த நான்கு நாட்களில் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் சுமார் 21.67 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் பொருட்கள் பெறப்பட்டுள்ளது என ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

தமிழகத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதத்தில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் விதி எண் 110ன் கீழ் 01.01.2019 அன்று முதல்** தமிழ்நாடு முழுவதும் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் முற்றிலும் தடை செய்யப்படுவதாக அறிவித்திருந்தார்கள்.

அதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களிலும் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் சுமார் 1.88 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் பொருட்கள் 31.12.2018 அன்று பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

மேலும், 01.01.2019 அன்று 2.25 மெட்ரிக் டன் அளவிலும், 02.01.2019 அன்று 8.35 மெட்ரிக் டன் அளவிலும், இன்று (03.01.2019) 9.19 மெட்ரிக் டன் என மொத்தம் கடந்த நான்கு நாட்களில் 21.67 மெட்ரிக் டன் அளவிலான தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டும், மாநகராட்சி அலுவலர்களால் பறிமுதல் செய்யப்பட்டும் உள்ளது.

தமிழக அரசால் தடை செய்யப்பட்டுள்ள 14 வகை பிளாஸ்டிக் பொருட்களை சேமித்து வைத்தாலோ, விற்பனை செய்தாலோ, உபயோகப்படுத்தினாலோ பறிமுதல் செய்யப்பட்டு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் ஒப்படைத்து பிளாஸ்டிக் மாசில்லா சென்னையை உருவாக்க தங்களது முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**